www.Padasalai.Net www.CBSEtips.in

Ts-10T

தென்காசி மாவட்டப் பொதுத் தேர்வுகள்
முதல் இடைப் பருவ பொதுத் தேர்வு - 2022

## வகுப்பு 10

நேரம்: 1.30 மணி **தமிழ்** மதிப்பெண்கள்: 50

**அ) உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** **8×1=8**

1) மெத்த வணிகலன் - என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது
அ) வணிகக் கப்பல்களும் ஐம்பெருங்காப்பியங்களும்
ஆ) பெரும் வணிகமும் பெருங்கலன்களும்
இ) ஐம்பெருங்காப்பியங்களும் அணிகலன்களும்
ஈ) வணிகக் கப்பல்களும் அணிகலன்களும்

2) "காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்" - இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது
அ) இலையும் சருகும் ஆ) தோகையும் சண்டும்
இ) தாளும் ஓலையும் ஈ) சருகும் சண்டும்

3) "உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம்
உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்"
- பாரதியின் இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள நயங்கள் யாவை?
அ) உருவகம், எதுகை ஆ) மோனை, எதுகை
இ) முரண், இயைபு ஈ) உவமை, எதுகை

4) "பாடு இமிழ் பனிக்கடல் பருகி" என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?
அ) கடல்நீர் ஆவியாகி மேகமாதல் ஆ) கடல்நீர் குளிர்ச்சி அடைதல்
இ) கடல்நீர் ஒலித்தல் ஈ) கடல்நீர் கொந்தளித்தல்

5) "சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி" என்னும் அடியில் "பாக்கம்" என்பது
அ) புத்தூர் ஆ) மூதூர் இ) பேரூர் ஈ) சிற்றூர்

6) தொகைநிலைத் தொடர்கள் ............... வகைப்படும்.
அ) 6 ஆ) 8 இ) 10 ஈ) 12

**பாடலைப் படித்து விடை தருக:**
அன்று அவண் அசைஇ, அல்சேர்ந்து அல்கி,
கன்று எரி ஒள்இணர் கடும்பொடு மலைந்து
சேந்த செயலைச் செப்பம் போகி,

7) இப்பாடலின் ஆசிரியர் யார்?
அ) அதிவீரராம பாண்டியன் ஆ) பெருங்கௌசிகனார்
இ) நன்னன் ஈ) நப்பூதனார்

8) இப்பாடலில் வரும் 'அல்' என்பதன் பொருள்
அ) துன்பம் ஆ) இரவு இ) பகல் ஈ) நெருப்பு

**ஆ) எவையேனும் ஆறனுக்கு விடை தருக: (16 கட்டாய வினா)** **6×2=12**

9) பாவலரேறு பெருஞ்சித்திரனார் படைத்த நூல்கள் சிலவற்றைக் கூறுக.
10) வசன கவிதை - குறிப்பு வரைக.
11) தற்கால உரைநடையில் சிலேடை அமையும் நயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.
12) விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.
13) "இறடிப் பொம்மல் பெறுகுவீர்" - இத்தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக.
14) "எழுது என்றாள்" என்பது விரைவு காரணமாக "எழுது எழுது என்றாள்" என அடுக்குத் தொடரானது எனில், "சிரித்துப் பேசினார்" என்பது எவ்வாறு அடுக்குத் தொடராகும்?

Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



15) **கலைச்சொல் தருக:**

அ) Discussion ஆ) Modern Literature

16) 'பல்லார்' எனத் தொடங்கும் குறளை எழுதுக.

**இ) எவையேனும் நான்கனுக்கு விடை தருக: (17 - கட்டாய வினா) 4×3=12**

17) **அடிமாறாமல் எழுதுக:**

'சிறுதாம்பு தொடுத்த' எனத் தொடங்கும் பாடல்

**(அல்லது)**

'விருந்தினனாக' எனத் தொடங்கும் பாடல்

18) தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுற மொழியும் பாங்கினை விளக்குக.

19) கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்துதலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?

20) 'புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது' - இதுபோல் இளம்பயிர்வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.

21) சோலைக் (பூங்கா) காற்றும் மின்விசிறிக் காற்றும் பேசிக்கொள்வது போல் ஓர் உரையாடல் அமைக்க.

22) தோட்டத்தில் மல்லிகைப்பூ பறித்த பூங்கொடி, வரும் வழியில் ஆடு மாடுகளுக்குத் தண்ணீர்த் தொட்டியில் குடிநீர் நிரப்பினாள். வீட்டினுள் வந்தவள் சுவர்க்கடிகாரத்தில் மணி பார்த்தாள். இப்பகுதியில் உள்ள தொகைச் சொற்களின் வகைகளை குறிப்பிட்டு விரித்து எழுதுக.

**ஈ) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க: 2×5=10**

23) முல்லைப்பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

**(அல்லது)**

உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

24) **காட்சியைக் கண்டு கவினுற எழுதுக:**



மு.சிவக்குமார்
ஸ்ரீராம் மெட்ரிக் மே.நி.ப.
வல்லம்-627809
9943340047

**உ) விரிவான விடையளிக்க: 1×8=8**

25) தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ்மன்றத்தில் பேசுவதற்கான உரைக்குறிப்புகளை எழுதுக.

**(அல்லது)**

அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க.

- - - - - - - - - -

Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com